7

# PROCEEDINGS OF PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED PROJECT OF THE UNIT OF M/s.P.KARUPPASAMY ROUGH STONE AND GRAVEL QUARRY, CHINNAKAMANPATTI VILLAGE, SATTUR TALUK, VIRUDHUNAGAR DISTRICT ON 10.11.2020 AT 11.00 A.M IN M/s. S.M.THIRUMANA MAHAL, No 4/214B, MADURAI BY PASS ROAD, SIVAKASI PIRIVU, SATTUR, VIRUDHUNAGAR DISTRICT

**Present:**

**Thiruvalargal:**

| | | | |
|---|---|---|---|
| 1. | R. Mangalarama Subramaniyan | : | District Revenue Officer, Virudhunagar. |
| 2 | G. Ramaraj | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar. |
| 3 | G.Gurusamy | : | Deputy Director, Department of Geology and Mining, Virudhunagar. |
| 4 | Project Proponent, public and other Officials | : | 82 Nos (List enclosed) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar welcomed the District Revenue Officer, Virudhunagar, Revenue officials, all general public and project proponents who have attended the public hearing for the proposed project of the M/s.P.Karuppasamy Rough Stone and Gravel Quarry, Chinnakamanpatti Village is required to get Environmental Clearance (EC) from the Ministry of Environment, Forest and Climate Change (MoEF &CC), Government of India. He added that the public notice informing the conducting of Public Hearing was published in "Dinamani" and " Indian Express" dated 30.09.2020. Also, he stated that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

Further, he stated that the views, suggestions and queries of the public and reply by the project proponent will be recorded through videography and the same will be sent to the Ministry of Environment, Forest and Climate Change/ State Environment Impact Assessment Authority.

The District Revenue Officer, Virudhunagar initiated the Public Hearing process. Further, the District Revenue Officer requested the project proponent to explain about their proposed project through power point presentation and requested the public to obtain necessary clarifications if they are having any doubts regarding the project.

Thiru. P.Karuppasamy, Proprietor of the quarry welcomed everyone and requested their Environmental Consultant to make presentation about the proposed project.

The Environmental consultant of the project has made presentation on the project to the public along with Environmental Management Plan.

The views of the public attended the Public Hearing and the replies by the Environmental Consultant on behalf of the proprietor are detailed below.

**Thiru.N. Ramkumar, Mettamalai.**

He informed that there is unemployment problem in this area. Hence, he requested the quarry management to give employment to the local public.

**Environmental Consultant:**

Assured to provide employment to the local public.

**Thiru.Dharmapandi, Chinnakamanpatti.**

There is no employment for the past 2 years. Hence, he requested to give employment. Also, he welcomed that the project.

**Environmental Consultant:**

Assured to consider the request to provide employment based on the qualification.

**Tmt.Sathya,Panchayat President,Chinnakamanpatti**

The Panchayat President requested the quarry management to provide facilities to the schools and to provide good road facilities in the Chinnakamanpatti panchayat area. Further, she requested to provide good water facilities to this panchayat area to supply uninterrupted

5

water supply to the public. Finally, she requested to provide necessary facilities to the Ramakrishna Ashramam functioning at Konampatti.

**Environmental Consultant:**

Assured to provide infrastructure facilities to the Chinnakamanpatti panchayat under CSR schemes.

After this, no one came forward to give opinion/view on the project.Hence, the District Revenue Officer, Virudhunagar has invited the public to offer their further more views if any. Even after that, there was no further response from the public. Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Virudhunagar has narrated the proceedings of the public hearing conducted and concluded the public hearing with vote of thanks.

List of public attended the public hearing along with recorded video(CD) of the entire proceedings and petition received directly are enclosed herewith.

District Environmental Engineer,
TNPC Board, Virudhunagar.

District Revenue Officer,
Virudhunagar.

District Collector,
Virudhunagar.

2/7

7

**திரு/ள்.பி. கருப்பசாமி கல் மற்றும் கிராவல் குவாரி, சின்னகாமன்பட்டி கிராமம், சாத்தூர் தாலுகா, விருதுநகர் மாவட்டத்தில் தொடங்கவுள்ள சுரங்கத்திட்டம் தொடர்பாக 10.11.2020 முற்பகல் 11.00 மணியளவில் திரு/ள்.எஸ்.எம். திருமண மண்டபம், மதுரை பைபாஸ் ரோடு, சிவகாசி பிரிவு, சாத்தூர், விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள்.**

பங்கேற்றோர்:

திருவாளர்கள்:

| | | | |
|---|---|---|---|
| 1 | இரா.மங்களராமசுப்பிரமணியன் | : | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>விருதுநகர். |
| 2 | கு. இராமராஜ் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம்,<br>விருதுநகர். |
| 3 | கு. குருசாமி | : | துணை இயக்குனர்,<br>புவியியல் மற்றும் கனிம வளத்துறை,<br>விருதுநகர். |
| 4 | தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் | : | 82 எண்கள்<br>(விவரம் இணைக்கப்பட்டுள்ளது) |

திரு/ள். பி. கருப்பசாமி கல் மற்றும் கிராவல் குவாரி மத்திய சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்திலிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்திற்கு வருகை புரிந்த மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர், வருவாய்த்துறை அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் தொழிற்சாலையின் உரிமையாளர்கள் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுகட்டுப்பாடு வாரியம், விருதுநகர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டம் நடைபெறும் விபரம் ஏற்கனவே "தினமணி" மற்றும் "இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 30.09.2020 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். இத்திட்டம் தொடர்பாக தொழிற்சாலை பிரதிநிதிகள் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்கள் மற்றும் அது தொடர்பாக தொழிற்சாலையின் உரிமையாளரின் பதில் ஆகியன வீடியோகிராபி மூலம் பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கை குறிப்புகள் உடன் மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம்/ மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

பின்பு, மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர், அவர்கள் பொதுமக்கள் கேட்டுணரும் கூட்டத்தை தொடங்கி வைத்தார். மேலும், இத்திட்டத்தின் உரிமையாளரை இத்திட்டம் தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறி, இத்திட்டம் தொடர்பான சந்தேகங்களையும், விளக்கங்களையும் கேட்குமாறு பொது மக்களை கேட்டுக் கொண்டார்.

பின்பு தி/ள். பி. கருப்பசாமி கல் மற்றும் கிராவல் குவாரி பங்குதாரர் திரு.P.கருப்பசாமி வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று தங்களது சுற்றுச்சூழல் ஆலோசகர் இத்திட்டம் தொடர்பாக தொடர்ந்து விளக்கவுரை ஆற்றுவார் என்று கூறினார். இதன்பிறகு சுற்றுச்சூழல் ஆலோசகர் இத்திட்டம் தொடர்பாகவும் மற்றும் இதுதொடர்பான சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் விளக்கவுரையாற்றினார்.

அதன்பின்பு, இக்கூட்டத்தில் பொதுமக்களின் ஆலோசனைகள், கருத்துக்கள், சந்தேகங்கள் மற்றும் அது தொடர்பாக இத்திட்டத்தின் பங்குதாரர் சார்பாக சுற்றுச்சூழல் ஆலோசகர் அளித்த விபரங்கள் பின்வருமாறு.

<u>திரு.N. இராம்குமார், மேட்டமலை</u>

இப்பகுதி மக்கள் வேலையில்லா திண்டாட்டத்தினால் சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, உள்ளூர் மக்களுக்கு குவாரி நிர்வாகம் வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும்.

<u>சுற்றுச்சூழல் ஆலோசகர்</u>

உள்ளூர் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்று கூறினார்.

<u>திரு.தர்மபாண்டி, சின்னகாமன்பட்டி</u>

இரண்டு ஆண்டுகளாக வேலையில்லாமல் திண்டாடி வருவதாக தெரிவித்தார். எனவே, இத்திட்டத்தில் வேலை வழங்க வேண்டினார். மேலும் இத்திட்டத்தை வரவேற்றார்.

<u>சுற்றுச்சூழல் ஆலோசகர்</u>

தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

திருமதி. சத்யா, பஞ்சாயத்து தலைவர், சின்னகாமன்பட்டி

சின்னகாமன்பட்டியில் இயங்கும் பள்ளிக்கு உள்கட்டமைப்பு வசதிகள் செய்து தர வேண்டினார். மேலும், இவ்வூராட்சி மன்ற பகுதியில் நல்ல சாலை வசதிகளை ஏற்படுத்தி தரவும் மற்றும் குடிநீர் வசதி செய்து தரவும் கேட்டுக் கொண்டார். இறுதியாக, கோணம்பட்டியில் இயங்கி வரும் இராமகிருஷ்ண ஆசிரமத்திற்கு தகுந்த உதவி செய்ய கேட்டுக் கொண்டார்.

சுற்றுச்சூழல் ஆலோசகர்

சின்னகாமன்பட்டி ஊராட்சி மன்ற பகுதியில் CSR திட்டத்தின் கீழ் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் செய்து தர ஒப்புக் கொண்டார்.

இதன் பின்பு இத்திட்டம் தொடர்பான கருத்துக்கூற யாரும் முன்வராததால், மேலும் கருத்துக்களை தெரிவிக்க மாவட்ட வருவாய் அலுவலர், விருதுநகர் அவர்கள் கேட்டுக்கொண்டார். இதன் பின்பும் யாரும் எவ்வித கருத்தும் தெரிவிக்கவில்லை. இறுதியில் கூட்டத்தில் இதுவரை நடந்த நடவடிக்கைகளை மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், விருதுநகர் அவர்கள் தொகுத்துக் கூறி கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல், கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த வீடியோ குறுந்தகடு மற்றும் இத்திட்டம் தொடர்பாக நேரடியாக பெறப்பட்ட மனு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
விருதுநகர்.

மாவட்ட வருவாய் அலுவலர்,
விருதுநகர்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
விருதுநகர்.